எம்.சி.ஓபி.எண் : 4061/2018 தேதி: 25.11.2025

மசா : 1

பெயர் : Jesuadian

த/பெயர் : Bakianathan

வயது : 82

**<u>மனுதாரரின் தரப்பில் சாட்சி 1ன் முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் 2ம் மனுதாரர். எனது தரப்பில் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நன்கு தெரிந்து கையொப்பம். எனது தரப்பு சான்றாவணங்கள் மசா ஆ 1 முதல் மசா ஆ66 வரை குறியீடு செய்யப்படுகிறது. மசா ஆ6 முதல் மசா ஆ9 வரை, மசா ஆ40, மசா ஆ49, மசா ஆ62 மற்றும் மசா ஆ66 எதிர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது மகன் ஜான் எலில்குமார் என்பவரது வாரிசு சான்றில் மசா ஆ59 ல் அவரது மனைவி பெயர் உள்ளது என்றால் சரிதான். மேற்படி விபத்தானது 7.4.2015 என்றால் சரிதான். ஓ.பி 4061/2018 என்ற மனுவானது அவர் உயிருடன் இருக்கும் போது தாக்கல் செய்த மனு தான் என்றால் சரிதான். விபத்து நடந்து 3 ஆண்டுகள் கழித்து தான் அவரது மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். இறந்த நபருக்கு 1 குழந்தை அவர் 6 வது எதிர்மனுதாரராக சேர்க்கபட்டுள்ளார் என்றால் சரிதான். 7.4.2015 க்கு பிறகு அவர் 11.6.2021 ல் அதாவது 6 வருடங்கள் 2 மாதங்கள் அவர் விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு தொடர் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்பற்கான மருத்துவ ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். 11.6.2021 ல் அவர் கோவிட்டால் பாதிக்கபட்டு அவர் சிகிச்சையில் இருந்தார் என்றால் இல்லை. எனது மகன் விபத்து காயத்தினால் இறக்கவில்லை என்றால் சரியல்ல. உடல்கூராய்வு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்தினால் தான் இறந்தார் என்று குற்றபத்திரிகை பரிவில் திருத்தப்பட்டதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர் வேறு விதமாக தான் இறந்துள்ளார் என்றாலும் நஷ்ட ஈடு கோருவதற்காக அவர் விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் இறந்துள்ளார் என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மசா ஆ6 ல் அவர் அந்நிறுவனத்தின் முத்திரையோ கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். அதில் நிறுவனம் சார்பாக வாகனத்தை இயக்குவதற்கு ரூ. 8,000 1ம் மனுதாரருக்கு கொடுக்கபட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். மெடிகல் அலோவன்ஸ் மற்றும் பி.எச்.ஏ அலோவன்ஸ் அவர்கள் செலவு செய்ய கொடுக்கபட்ட தொகைகள்

என்றால் சரிதான். பேசிக் சம்பளமானது ரூ. 12,500 என்றால் சரிதான். ஏச்.ஆர்.ஏ ரூ.7,107 என்றால் சரிதான். எனது மகன் அவரது சமபளத்தில் 60 சதவீதம் அவர் பணிக்கு செல்வதற்காகவும் செலவு செய்வதற்காக மட்டுமே கொடுக்கபட்டது என்றால் சரிதான். அவர் மேற்படி விபத்தினால் சம்பளத்தின் இழப்பு என்பது ரூ. 12,500 மட்டும் தான் என்றால் சரியல்ல. அவருக்கு பணி உயர்வு பெற்று ரூ.48,880 வரை சம்பளம் வாங்கியுள்ளார். மசா ஆ7 ஆக்ஸிஸ் வங்கியின் ஆவணத்தில் முதல் 6 பக்கத்தில் மேற்படி வங்கியின் லட்டர் பேடோ முத்திரையோ இல்லை என்றால் சரிதான். கடைசி பக்கத்தில் முத்திரை குத்தி கையொப்பம் இட்டுள்ளார்கள். எந்த கம்பனியிலிருந்தும் எனது மகனின் மருத்துவ சிகிச்சை காப்பீடு தொகை பெறவும் இல்லை. நான் பெறவும் இல்லை. ஆனால் என் மகன் பெயருக்கு நியூ இந்தியா இன்சுரன்ஸ் காப்பீடு நிறுவனத்தில் மருத்துவ காப்பீடு உள்ளது. அந்த காப்பீடு சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவருக்கான மருத்துவ செலவுகள் அனைத்தும் மருத்துவ காப்பீடு மூலம் தொகை பெற்றவிட்டார் என்றால் சரியல்ல. அதனால் தான் மேற்படி காப்பீடு சான்றை இந்த வழக்கில் தாக்கல் செய்யதால் உண்மை தெரிந்துவிடும் என்று தாக்கல் செய்யவில்லை என்றால சரியல்ல. விபத்திற்கு பிறகு அவரை அவர் பணி செய்த நிறுவனத்திலிருந்து அவரை பணி நீக்கம் ஏதும் செய்யவில்லை. எனது மகன் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது ரெங்கராஜன் என்ற அவரது நண்பர் வேறு ஒரு இருசக்கர வாகனத்தில் அவர் பின்னால் சென்றுக் கொண்ருந்தார். மசா ஆ32 ல் குளோபல் மருத்துவமனையிலிருந்து கொடுக்கபட்ட விடுவி சான்றில் கடைசியாக அவர் விடுவி பெறும் போது 9.6.2015 அன்று கழுத்தில் அணிந்திருந்த சாப்ட் சர்விகால் காலரை அப்புறப்படுத்த பரிந்துரை செய்யபட்டிருந்தது என்றால் சரிதான். அவர் மேற்படி சிகிச்சை பெற்ற பிறகு அவருக்கு கொடுக்கபட்ட மருந்துகளை முறையாக எடுத்துக் கொண்டதால் சற்று குணமடைந்து Improved in Motor and sensation and also sitting balance என்று கண்டுள்ளது என்றால் அதில் உள்ளது ஆனால் வெளியே வரும் போது அவர் படுத்த படுகையாக தான் இருந்தார். மசா ஆ32 ல் அவருக்கு பிசியோ 13.7.2015 முதல் 14.9.2015 வரை பிசியோதரபீ டிஸ்ஜார்ஜ் சம்மரி ஜெராக்ஸ் நகல் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அசல் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். மசா ஆ39 ல் உள்ள போட்டோ நகல்கள் இந்த வழக்கிற்காக அவர் கட்டிலியே படுத்தவாறு எடுக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. மசா ஆ41 ல் 1 லிருந்து 35 வரை Provision Bill என்று தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மசா ஆ41 ல் பக்கம் 40 ல் சிவசக்தி கைடேக் பிசியோதரபிக்கு ரூ. 1,70,475 என்று காட்டப்பட்டுள்ளது றேம்படி பில்லில் அதை கொடுத்த மருத்துவர் மற்றும் மருத்துவமனையின் சீல்லோ

கையொப்பமோ உள்ளதா என்றால் இல்லை. அதே போல் மசா ஆ41 பக்கம் 41 முதல் 62 வரை இந்த வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி அனைத்து மருத்துவ பில்களுக்கும் மருத்துவரின் பிரிஸ்கிரிப்சன் தாக்கல் செய்யவில்லை என்றால் மருத்துவமனையிலே கொடுக்கபட்டதால் தாக்கல் செய்யவில்லை. மருத்துவமனையில் சேர்ந்து விடுவிக்கும் வரையிலான மருத்துவ செலவிற்கு கன்சாலிடேட் பில்களாக கடைசி பில்கள் சம்மரி கொடுக்கபடும் என்றால் இல்லை. எனக்கு கன்சாலிடேட் பில் கொடுத்துள்ளார்கள் என்றாலும் நான் வேண்டுமென்று அதை மறைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. மசா ஆ41 ல் பக்கம் 63 லிருந்து 188 வரைக்கும் உள்ள ஆவணங்களில் கலர் ஜெராக்ஸ் எடுக்கபட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதே போல் நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் ஒரே பில்கள் பல தடவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எந்தவித மருத்துவ பில்களுக்கு மருத்துவரின் பிரிஸ்கிரிப்சன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சுமார் 5 மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்துள்ளார் என்றால் சரிதான். மசா ஆ49 ல் அது எந்த மருத்துவமனையால் வழங்கபட்டது என்ற விவரம் ஏதும் அதில் இல்லை என்றாலும் அது ஒரு வெள்ளை தாளில் கொடுக்கபட்டுள்ளது ஆனால் அது மருத்துவரின் முத்திரையோ கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல கையொப்பம் உள்ளது. மசா ஆ 50 ல் அவருக்கு நுரையீரலில் பாதிப்பு இருப்பதாக குறிபிடபட்டுள்ளது என்றால் சரிதான். மசா ஆ52, மசா ஆ53 மற்றும் மசா ஆ54 ல் அவர் கோவிட் 19 நோயால் பாதிக்கபட்டுள்ளாரா என்பதற்கான சான்று என்றால் அது அவருக்காக எடுக்கப்படடது அல்ல அவர் தாயார் உடன் மருத்துவமனைக்கு சென்றமையால் எடுக்கபட்டது. மசா ஆ56 ல் பைனல் டைகனிசிஸ் என்று கண்டு கோவிட் 19 அறிக்கை என்று கொடுக்கபட்டுள்ளது என்றால் என்ற தலைப்பில் உள்ளது உள்ளே என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி மசா ஆ56 ஆனாது 8.6.2021 ல் தான் கோவிட் 19 நிமோனியா என்ற சான்று வழங்கபட்டுள்ளது என்றால் சரிதான். அவர் 11.6.2021 ல் 3 நாள்களில் இறந்துள்ளார் என்றால் சரிதான். அவர் என் வீட்டில் தான் இறந்தார். மசா ஆ61 ல் Fit to fly by air என்று சான்று பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அது எதற்காக வாங்கபட்டது என்று தெரியாது. மசா ஆ66 ல் குளோபல் கேல்த் மருத்துவமனையின் ஆவணத்தில் 17.4.2015 ல் 1 முதல் 10 வரையுள்ள பக்கத்தில் அனைத்து பில்களும் முன்தொகை செலுத்தியதற்கான ரசீதுகள் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மசா ஆ66 ல் பக்கம் 74 ல் அப்போலோ மருத்துவமனையில் ரூ.3,99,999 செலவானதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பில்களில் Draft not final BILL என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் Total entire

bill என்று கண்டுள்ள ரூ.4,25,013 கண்டுள்ளது என்றால் சரிதான். பக்கம் 64 லிருந்து 74 வரை தோராயமான பில் என்றும் Draft not final என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பக்கம் 74 ல் ரூ, 4,25,013 மேற்படி பில்கள் எந்தெந்த தேதியில் பீல்கள் செலுத்தபட்டது என்று வெவ்வேறு ரசீது எண்ணிகளில் தனியாக தனியாக மீண்டும் பக்கம் 61, 63, 65 ,66 ,68,75, 76 திருப்பவும் தாக்கல் செய்து நஷ்ட ஈடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. அதே போல் பக்கம் 118 லிருந்து 168 வரையில் பல மருத்துவ பில்களை பார்மஸி உடந்தையுடன் தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி மருத்துவ பில்களுக்கு மருத்துவரின் பரிந்துரை செய்ததற்கோ அல்லது பரிசோதனை செய்ததற்கும் எந்த ஆதரவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடைசி பக்கமானது 168 முதல் 173 வரையில் உள்ள பில்களில் மருத்துவரின் லட்டர் பேடில் கொடுக்கபடாமல் உள்ளது என்றால் முத்திரையும் கையொப்பமும் உள்ளது. எனது மகனின் மருத்துவ செலவுகள் அனைத்தும் அவர் பணி செய்த நிறுவனதிலே வழங்கிவிட்டார்கள் என்றாலும் அதை வேண்டுமென்றே மறைத்து இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. விபத்து காயத்திற்கு இறப்பிற்கு சமந்தம் இல்லை என்பதால் இந்த மனுவானது இறப்பு சமந்தமான நஷ்ட ஈடுக்கு நிலைக்தக்கது அல்ல என்று சொன்னால் சரிய்லல. கணினி நிருபுணர்களின் உதவியுடன் மருத்துவ பில்கள் இந்த வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனு தாக்கல் செய்த காயமடைந்த மனுதாரர் விபத்தின் காரணமாக இறக்காத காரணதினால் இந்த மனு சம்பள இழப்பு என்பதற்கான தலைப்பில் ஏற்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு இந்த விபத்திற்கு காரணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது மகனின் கவனக்குறைவால் ஒட்டியயததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் கோரும் நஷ்ட ஈடானது மிகவும் அதிகமானது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.